SUPPLEMENTARY GLOSSARY OF SPECIAL TERMS SURVEY & LAND RECORDS DEPARTMENT

சிறப்புச் சொற்கள் துணை அகராதி

நில அளவு, நிலப் பதிவேடுகள் துறை

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்றது.

சிறப்புச் சொற்கள்—துணை அகராதி

நில அளவு, நிலப் பதிவேடுகள் துறை

Abrupt	.. திடீரென்று.
Acid resistant	.. அமிலத்தடை பொருள்.
Acute angle	.. குறுங்கோணம்.
Accuracy	.. சரிநுட்பம், துல்லியம்.
Acquisition sketch	.. ஆர்ஜித நிலத்தின் வரைபடம்.
Adapter	.. பொருத்தும் சட்டம்.
Adjusting screws	.. சரிபடுத்தும் திருகாணிகள், சீர்படுத்தும் திருகாணிகள், பொருந்தச் செய்யும் திருகாணிகள்.
Adjustment of cylinders	.. உருளைகளைப் பொருந்த வைத்தல்.
Adjustment of pressure	.. அழுத்தத்தைச் சரி செய்தல்.
Additional Officer	.. இணை அலுவலர்.
Agraharam	.. அக்ரஹாரம்.
Alignment	.. நேர்பாடு, நேர்படுத்துதல்.
Almanac	.. பஞ்சாங்கம்.
Altitude	.. செங்குத்து உயரம்.
Ammonium Hydrosulphate	.. அமோணியம் ஹைட்ரோ ஸல்பேட்.
Angular limit	.. கோண வரம்பு.
Angle of depression	.. கோண இறக்கம்.
Angle of elevation	.. கோண ஏற்றம்.
Angle	.. கோணம்.
Angle, obtuse	.. விரி கோணம்.
Angle, right	.. நேர் கோணம்.
Appropriate	.. பொருத்தமான.
Aqueduct	.. பாலக்கால்.
Arc light	.. வில் ஒளி.
Arrows (for chain)	.. (சங்கிலி) ஊசிகள்.
Area Square Paper	.. பரப்பளவு சதுரத்தாள்.
Area Progress Register	.. நில அளவை வேலை நிலைப் பதிவேடு.
Area list	.. பரப்பு அளவு பட்டியல், விஸ்தீரணப் பட்டியல்.
Arrow mark	.. சர்வேக் கல்லுக்குரிய குறி.
Area computation	.. பரப்பு அளவு கணித்தல்.

Asphaltum ..	நிலக்கீல் கலவை, அஸ்பால்ட் கலவை.
Assistant Director of Survey ..	நில அளவை உதவி நெறியாளர், நில அளவை உதவி இயக்குநர்.
Automatic check ..	சுழன் ஆப்செட் அச்சு யந்திரத்திலுள்ள தானே இயங்கும் தடுப்பு.
Axis ..	அச்சு.
Axis of co-ordinates ..	இணைத்தூர முனைகளைச் சேர்க்கும் அச்சுகள்.
Ayacut ..	ஆயக்கட்டு.
Azimuth ..	உச்ச அடிவான வளைகோடு.
Azimuthal Bearing ..	கொடுக்கப்பட்ட கோட்டிற்கும் நேர் வடக்குக்கும் உள்ள கோணம்.
'B' Field Book ..	'B' நில அளவைப் புத்தகம்.
Base plate ..	கெட்டி அடித்தகடு.
Base ..	பாத வரி.
Balance-spring ..	வில் தராசு.
Base line ..	அளவு ஆதாரக்கோடு.
Beading rubber ..	எதிர் மறையைத் துத்தநாகத் தகட்டில் மாற்றும் கருவியின் விளிம்புகளில் பொருத்தப் பெற்ற ரப்பர்.
Bed plate ..	அச்சடிக்கும் துத்தநாகத் தகட்டை முடுக்கும் அடி இரும்புத் தட்டு.
Belting leather ..	சக்கரங்களை இணைக்கும் வார்த்தோல்.
Belt lacing ..	யந்திர வார்ப்பட்டைகளை இணைக்கும் சாதனம்.
Beam compass ..	நீளச்சட்டக் கவராயம்.
Bend ..	வளைவு.
Bearing ..	துருவகோணம்.
Bearing, deduced ..	கணிக்கப் பெற்றத் துருவகோணம்.
Bearing, reduced ..	குறைக்கப்பெற்றத் துருவகோணம்.
Bearing, true ..	சரியான துருவகோணம்.
Bearing magnetic ..	காந்த துருவகோணம்.
Bit (Scale) ..	துண்டு அளவுகோல்.
Bi-junction ..	இரு சந்தி.
Bitumen ..	நிலக்கீல்.
Bill hook, single edged ..	ஒரு முனை அரிவாள்.
Bill hook, double edged ..	இரு முனை அரிவாள்.
Bisector ..	இரு சம வெட்டுக்கோடு.
Bleaching the negative ..	எதிர் மறையை வெண்மைப் படுத்தல்.
Blackening the negative ..	எதிர் மறையை கருமைப்படுத்தல்.
Bleaching bath ..	வெண்மைப் படுத்த உதவும் தொட்டி.
Black print ..	மூல அச்சுத் தகட்டிலிருந்து கறுப்பு மையில் எடுத்த அச்சுப் பிரதி.

Blanket rubber .. போர்வை ரப்பர்.
Blue print (Negative) .. இரும்பு உப்புப் பூசி அச்சிட்ட எதிர் பிரதி.
Blue print (Positive) .. இரும்பு உப்புப் பூசி அச்சிட்ட பிரதி.
Block .. பெரும் பகுதி.
Blanket cylinder .. ரப்பர் போர்வை சுற்றிய உருளை.
Blanket tightening bar .. ரப்பர் போர்வையை இறுக்கும் இரும்பு சட்டம்.
Bleeding of ink .. மை கசிதல்.
Blue print for drawing originals .. மூலப்பட வரைவுக்கான நீல அச்சு.
Bow-Compass .. வில் கவராயம்.
Boundary .. எல்லை.
Boundary pillar .. எல்லைத் தூண்.
Boundary marks .. எல்லைக் குறிகள்.
Boundary demarcation sketch .. எல்லைக் குறிகள் காட்டும் வரைபடம்.
Boundary dispute .. எல்லைத் தகராறு.
Bromide printing .. புரோமைடு அச்சு முறை.
Brass compass .. பித்தளைக் கவராயம்.
Branch Survey Office .. நில அளவை கிளை அலுவலகம்.
Brass Office Seal .. அலுவலக பித்தளை முத்திரை.
Brake .. விசைத் தடைக் கருவி.
Brake shoe .. விசைத் தடை லாடம்.
Brushes with metallio ferrules .. உலோகப் பூண் உள்ள தூரிகை.
Brushes in quills .. இறகுத் தூரிகை, இறகால் ஆன தூரிகை.
Burnisher .. வரைபடங்களில் தேய்த்த இடங்களைச் சரிசெய்ய உதவும் கருவி.
Bucket .. வாளி.
Bund .. கரை.
Burgundy pitch .. பர்கண்டிக் கீல்.
Bush .. உள்ளாழி.
Bunged plate .. அச்சிடுகையில் மை பரவிய தகடு
Bunged print .. அச்சிடுகையில் மை பரவிய பிரதி
Buttery Consistency .. வெண்ணெய்ப் பதம்.
Cairns .. எல்லைக் கற் குவியல்
Capstan headed screw .. கேப்ஸ்டன் தலை மறையாணி.
Carbon brush .. கரிக்கட்டை தூரிகை.
Carbon (Arc lamp) .. பிறை விளக்குக் கரித் துண்டுகள்.
Card index .. விளக்க அட்டை.
Cam .. மாற்று இயக்கக் கருவி.
Cadastral survey .. நிலத் தீர்வை விதிப்புக்காகச் செய்யும் நில அளவை.

Calender of returns	..	காலமுறை விவர அறிக்கைப் பட்டியல்.
Cartridge	..	அட்டைத் தாள்.
Calculation	..	கணக்கிடுதல்.
Calculation sheet	..	கணக்கிடும் தாள்.
Calculated measurement	..	கணக்கிட்ட அளவு, கணித்த அளவு.
Celestial equator	..	வான நடுக்கோடு.
Centering	..	மையப் படுத்தல்.
Centre check	..	மத்திய ஆய்வு.
Central Survey Office	..	நில அளவை மத்திய அலுவலகம்.
Central Boss	..	மத்தியிலுள்ள வட்டக் குமிழ்.
Charts	..	விளக்கப் படங்கள்.
Chromo-Lithography	..	வண்ணப் படங்கள் அச்சிடும் ஒருவித முறை.
Chain	..	சங்கிலி.
Chaining	..	சங்கிலியால் அளத்தல்.
Chain survey	..	சங்கிலி அளவை.
Check line	..	சோதனைக் கோடுகள், உபரிக் கோடுகள்
Chain index	..	சங்கிலி வில்லை.
Chain survey stones	..	ட்ராவேர்ஸ் கோடுகளில் நடும் அளவைக் கற்கள்.
Chain-man	..	சங்கிலி ஆள்.
Chord	..	நாண்.
Circle	..	வட்டம்.
Circle-pen	..	வட்ட வரைவி.
Circumference	..	பரிதி.
Circuit	..	கோண அளவுமானியால் அளக்கப் படும் பகுதி.
Circle Officer of Survey and Land Records	..	நில அளவை பதிவேடுகள் துறைவட்ட அலுவலர்.
Clothing the cylinder	..	உருளையைப் போர்த்துதல்.
Clutch	..	யந்திரத்தை ஓட்டவும், நிறுத்தவும் உதவும் பிடி.
Clutch clamp-bar	..	க்ளட்ச் தண்டு.
Close-block	..	நெருக்கமான பகுதி.
Co-Latitude	..	இணை நேர் கோடு.
Coating Uniform	..	ஒரே சீரான பூச்சு, ஒரே மாதிரிப் பூச்சு.
Colour solid	..	கெட்டி நிறம்.
Colour washes	..	வர்ணப் பூச்சு, வர்ணத் துடைப்புகள்.
Colour change	..	நிற மாறுதல்.
Colour-Combination	..	வண்ணச் சேர்க்கை.
Combined colour proof	..	இணைப்பு வண்ணப் பார்வைப் பிரதி, சேர்க்கை நிறப் பிரதி.
Colour hue	..	வர்ணச் சாயல்.

Colour shade ..	வர்ணச் சாயல்
Colour tint ..	இள நிறம்.
Colour tone ..	நிறத்தின் சாயை.
Colour matching ..	வண்ணப் பொருத்தம்.
Colour pattern ..	வண்ண அமைப்பு.
Colour wash-up ..	உருளையில் உள்ள வண்ண மைக் கழுவல்.
Colour separation ..	வர்ணப் பிரிவு.
Colour separated negative ..	நிறம் பிரிக்கப்பட்ட எதிர்மறை நிழற் படத் தகடு, குறிப்பிட்ட நிறத்தில் அச்சிடக்கூடாத குறிகளைப் பூசி மறைத்த எதிர்மறை.
Connecting rod ..	இணைப்புக் கம்பி.
Commutator ..	மின்விசை மாற்றி.
Correction guide ..	திருத்தம் செய்ய வழிகாட்டி.
Correction list	திருத்தப் பட்டியல்.
Cow-tails	கவ் டேயில், ரப்பர் போர்வையை இயக்கும் கருவி.
Cockling of paper	காகிதம் சுருங்குதல்.
Counter shaft	முரண் தண்டு.
Coating the plate with collodion..	கண்ணாடித் தகட்டைக் கலோடியனால் பூசுதல்.
Combined inspection ..	கூட்டு ஆய்வு.
Communal purposes ..	சமூக உபயோகங்கள்.
Course ..	வழி.
Computor (Junior) ..	கணிகர் (இளநிலை).
Computor (Senior) ..	கணிகர் (முதுநிலை).
Conventional line ..	மரபுக்கோடு.
Compilation ..	தொகுத்தல்.
Contour lines ..	படங்களில் சம உயரங்களைக் காட்டும் கோடுகள்.
Colour cake ..	வர்ணக்கட்டி.
Construction ..	கட்டுதல், வரைதல்.
Corrections ..	திருத்தங்கள்.
Commencement ..	ஆரம்பித்தல், துவங்குதல்.
Comparison ..	ஒத்துப் பார்த்தல்.
Computation ..	கணித்தல்.
Computation sheet ..	கணிக்கும் தாள்.
Conspicuous ..	எடுப்பான.
Consecutively ..	தொடர்ச்சியாக.
Co-terminus ..	ஒரே முடிவான.
Coolies ..	கூலியாட்கள்.
Correlation ..	தொடர்பு.
Co-ordinates ..	அச்சுத் தூரங்கள்.

Computing Scale .. பரப்பு அளவி.

Correlation Statement .. தொடர்பு விளக்கப் பட்டியல்.

Cost Recovery Statement .. தப்பான அளவையை திருத்துவதற்கு ஏற்படும் செலவை பொறுப்பாளர்களிடமிருந்து வசூலிப்பதற்கான பட்டியல்.

Cost rate .. செலவு விகிதம்.

Contractor .. ஒப்பந்தக்காரர்.

Compiled convergency of meridian .. சரியான துருவ கோணம், கணக்கிடக் காந்த துருவ கோணத்தில் செய்யும் திருத்தம்.

Cross direction .. நீரில் போட்டத்தாள் சுருளும் திசை.

Cross wire .. குறுக்குக் கம்பி.

Crowded location .. நெருக்கமான இடம்.

Credential .. அதிகாரப் பத்திரம்.

Cross-staff .. நேர்கோணக் கட்டை.

Cutting of paper .. தாள் வெட்டுதல்.

Cutting negatives .. எதிர்மறைகளில் தேவையான குறிகளை ஊசிகளால் வரைதல்.

Current strength .. தற்போதுள்ள சிப்பந்தி எண்ணிக்கை.

Curved line .. வளைகோடு.

Culmination .. சமாப்தி, முடிவுபெறுதல்.

Cumulative error .. திரள் பிழை.

Cummer Band .. இடுப்புக் கச்சை.

Cubic .. கன.

Cutting measurement .. செங்குத்து சந்திப்பு அளவு.

Cylinder Bearings .. உருளைகளின் போதிகைகள்.

Damping Rollers .. ஈரப்படுத்தும் உருளைகள்.

Damping Bed .. உருளைகளை ஈரப்படுத்தும் கருவி.

Dark Slide .. நுட்ப உணர்ச்சியுள்ள பூச்சைக் கொண்ட கண்ணாடியை இருட்டறையிலிருந்து நிழற்படக் கருவிக்கு வைத்துச்செல்லும் பெட்டி.

Declination .. இறக்கம்.

Deduced Angles .. கணக்கிட்டுப்பெற்றக் கோணங்கள்.

Deep grain .. அச்சிடும் துத்தநாகத் தட்டில் தேவையான ஆழமுள்ள குழி.

Deduced .. கணக்கிட்டுப்பெற்ற.

Deflection .. விலகுதல்.

Defining .. வரையறுத்தல்.

Degree .. பாகை, அளவு.

Delineation .. வரைந்து குறித்தல்.

Delta .. ஆற்றின் முகத்துவாரம்.

Deletion guide .. நீக்கல் வழிகாட்டி.

Delivery Cylinder	..	அச்சிட்ட பிரதிகளை விடுவிக்கும் உருளை.
Delivery Tapes	..	அச்சிட்ட பிரதிகளை விடுவிக்க உதவும் நாடாக்கள்.
Delivery Board	..	அச்சிட்ட பிரதிகள் வந்து விழும் பலகை.
Demarcation	..	எல்லை வரையறுத்தல்.
Demarcation sketch	..	நில அளவைக்கல் விவர வரைபடம்.
Denovo	..	மறுபடியும் செய்தல்.
Departure	..	கிழ மேல் திசை அளவுகள்.
Deputy Director	..	*துணை நெறியாளர்.*
Deputy Surveyor	..	நில அளவைத் துணை அலுவலர்.
Despatcher	..	அனுப்பு பணியாளர்.
Desensitise	..	அச்சிடும் துத்தநாகத் தட்டில் பிசின் பூசுதல்.
Detachment	..	பிரித்த பகுதி.
Detailed Town Survey	..	நகர விரிவான நில அளவை.
Details standing out	..	*பார்வைக்குச் சரியாக அமைந்திருக்கும் விவரங்கள்.*
Developing	..	நிழற்பட உரு விளக்குதல்.
Developer (in photography)	..	நிழற்பட உரு விளக்கும் பொருள்.
Developing negatives	..	நிழற்பட எதிர்மறையில் உருவத்தை விளக்குதல்.
Diary of Computor-Draftsman	..	கணிகர், வரைபட வரைவாளர் நாட் குறிப்பு.
Diagram	..	விளக்கப்படம்.
Diagonal	..	மூலைவிட்டமான.
Diaphragm	..	விதானம்.
District Surveyor	..	நில அளவை மாவட்ட அலுவலர்.
Discrepancy list	..	வேறுபாட்டுப் பட்டியல்.
District Touring map	..	சுற்றலுவலர்க்கான மாவட்டப் படம்.
Distilled water	..	வடித்த நீர்.
Distance	..	தூரம், தொலைவு.
District Boundary	..	மாவட்ட எல்லை.
District Origin	..	மாவட்டப் பட தயாரிப்பு மையம்.
Distinguishing marks	..	வேறுபாட்டுக் குறிகள்.
Distributing Rollers	..	நிறமையை பகிர்ந்திடும் உருளைகள்.
Distortion	..	உருக்குலைவு, அளவுக் குலைவு.
Dog Clamps	..	துத்தநாகத் தகட்டை உருளையில் இறுக்கும் கருவி.
Draftsman	..	வரைபட வரைவாளர்.
Drawing pen	..	வரைபேனா.
Drawing Board	..	படம் வரையும் பலகை.
Drilling	..	துளையிடுதல்.

Drain .. வடிகால்.

Dry plates .. உலர்ந்த சில்லுகள்.

Drawing blue print .. வரைவதற்கான இள நீல நிற அச்சுப் பிரதி.

Duplicate Field Measurement Book. .. புல அளவைச் சுவடி இரண்டாம் பிரதி.

Duplicate .. இரட்டையாக, இரண்டாம் பிரதி.

Ductor roller .. மைக்கலத்தில் சுழலும் உருளை.

Duplication of negatives .. எதிர்மறை சில்லுகள் இரட்டிப்பு.

Earthen Road .. மண் சாலை.

Earthen mounds .. மண் மேடுகள்.

Easting .. கிழக்குத் திசையளவு.

Ebonite .. கந்தகம் கலந்த கெட்டி ரப்பர்.

Eccentric .. அச்சிடும் துத்தநாகத் தகட்டையும் தாளையும் சுழலும் உருளைகளின் உதவியால் பின்னும் முன்னும் இயக்கும் கருவி.

Edging with Tape .. பட ஓரங்களில் நாடா ஒட்டுதல்.

Electricity .. மின்சாரம்.

Emulsion .. பசைக் குழம்பு.

Emulsifying .. பசைக் குழம்பாக்கல்.

Enbloc .. முழுவதும்.

End Ring .. கடைசி வளையம்.

Engraving .. எதிர் மறையில் ஊசியால் வரைதல்.

Enfranchised Inam .. உரிமை பெற்ற இனாம், உரிமையுள்ள இனாம்.

Enlargement sketch .. பெரிதாக்கிய வரைபடம்.

Encroachment sketch .. நில ஆக்ரமிப்பு வரைபடம்.

Enlargement .. பெரிதாக்கல்.

Equal .. சரிசமம்.

Equalise .. சரிசமம் செய்தல்.

Equalisation .. சமப்படுத்தல்.

Equalisation of Bends .. வளைவுகளைச் சரிக்கட்டுதல்.

Equinox .. பகல் இரவு சமமான நாள்.

Equation of Time .. சராசரிப் பகல் அளவுக்கும், குறிப்பிட்ட நாளின் பகல் அளவுக்கும் உள்ள வேறுபாடு.

Equipment .. தளவாடங்கள், உபகரணங்கள்.

Ecliptic .. சூரியனின் தோற்றப்பாதை.

Error .. பிழை.

Error list .. பிழைப் பட்டியல்.

Expanded metal .. வெட்டி விரிவாக்கிய உலோகத்தகடு.

Exposure .. ஒளிபடச் செய்தல்.

Exhausted .. தீர்ந்துபோயிற்று.

Exhaust	.. வெளியேற்றும் குழாய், வெளியேற்று.
Eye letting	.. சிறுதுளையிடல்.
Eye sketch	.. உத்தேசப்படம்.
Eye piece (of Telescope)	.. தொலை நோக்கியின் கண்பக்க லென்ஸ்.
Facilitate	.. எளிதாக்கு, வசதி செய்.
Fair Block Map	.. திருத்திய வட்டாரப்படம்.
Fair Area List	.. திருத்திய விஸ்தீரணப் பட்டியல்.
Falsification of Accounts	.. பொய்க் கணக்கு எழுதல்.
Falsification of Records	.. பொய்ப் பதிவு செய்தல்.
False Bottom	.. அடித்தகட்டின்மேல் பொருத்திய தகடு.
Fatty Acid	. கொழுப்புள்ள அமிலம்.
Field Block map	.. பெரும் பகுதி வரைபடம்.
Field Book	.. புல அளவுச் சுவடி.
Field Boundary dispute	.. புல எல்லைத் தகராறு.
Field Boundary	.. புல எல்லை.
Field Coil	.. இயக்கும் கருவியில் மின்சாரத்திறைல் காந்த சக்தி உண்டாக்கும் கம்பிச் சுருள்.
Field Demarcation sketch	.. புல அளவைக் கல் வரைபடம்.
Field inspection	.. புல ஆய்வு.
Field line	... புல எல்லைக்கோடு.
Field Register	.. புலப் பதிவேடு.
Field sketch	.. புல வரைபடம்.
Field stone	.. புலக்கல்.
Field Survey	.. புல அளவை.
Field Surveyor	.. நில அளவுப் பணியாளர்.
Feet Chain	.. அடி சங்கிலி.
Feed Board	.. யந்திரத்தில் அச்சிடுவதற்குத் தாள் வைக்கும் பலகை, மையிடும் பலகை,
Figuring	.. எண் எழுதுதல்.
Final Examination Report	.. முடிவுச் சோதனை அறிக்கை.
Final Area List	.. முடிவான விஸ்தீரணப் பட்டியல்.
Finalling	.. முடிவு செய்தல்.
Finishing	.. பூர்த்தி செய்தல், முடித்தல்.
First proof	.. முதல் பார்வைப்படி.
Fixing (Negative)	.. எதிர்மறை நிழற் படத்தை நிலைப் படுத்தல்.
Flag staff	.. கொடி கட்டிய கம்பு.
Flat Negative	.. ஒளியைப் போதுமான அளவு மறைக்காத அச்சிடாதப் பகுதியுள்ள எதிர் மறை.

Flat Bed machine .. தட்டைத்தள யந்திரம்.

Fluffing of paper .. தாள்ப்ளப் (தாள்களிலுள்ள சில செல்லுலோஸ் நூல் இழைகள் அச்சிடும் தகட்டிலோ ரப்பர் கம்ப ளத்திலோ ஒட்டுதல்.

Focussing .. ஒளி குவியச் செய்தல்.

Foil Aluminium .. அலுமினிய மென் தகடு.

Foil Tin .. தகர மென் தகடு.

Folding flat mounted copies .. துணியில் ஒட்டிய முழுப் பிரதிகளை மடித்தல்.

Folding paper copies .. அச்சிட்ட காகிதப் பிரதிகளை மடித்தல்.

Follower .. பின் தொடர்பவர்.

Foolscap .. ஓரளவைத்தாள்.

Foot Note .. அடிக்குறிப்பு.

Foot .. அடி.

Foot path .. நடைபாதை.

Forecast .. முன் மதிப்பீடு.

Forest Cairn .. வன எல்லைக் கற்குவியல்.

Fork handle .. கவர்முள் பிடி.

Fork .. கவர்முள்.

Fort .. கோட்டை.

Foundation .. கடைக்கால், அஸ்திவாரம்.

Fountain .. ஊற்றுக்கண், சுனை.

Fountain Roller .. நீர் அல்லது மைக்கலத்தில் சுழலும் உருளை.

Four in Series Arc Lamps .. நான்கு அடுக்கு வில் விளக்கு.

Fraction .. பின்னம்.

Frame printing down .. எதிர்மறையிலிருந்து துத்தநாகத் தகட்டிற்கு உருவத்தை மாற்ற உதவும் கருவி,

Frame printing down (Box pattern) .. எதிர்மறையிலிருந்து துத்தநாகத் தகட்டிற்கு உருவத்தை மாற்ற உதவும் கருவி (பெட்டி வடிவம்).

Frame printing down (pneumatic) .. எதிர்மறையிலிருந்து துத்தநாகத் தகட்டிற்கு உருவத்தை மாற்ற உதவும் கருவி (காற்று அழுத்தத் தால் இயங்கும்).

Friction .. உராய்தல், உரைப்பு.

Friction clutch .. உராய்வு க்ளட்ச்.

Fudged work .. போலி வேலை.

Fuse wire .. உருகு கம்பி.

Gear Mark .. பல் சக்கரத்தின் அடையாளம்.

Gear wheels .. இணைந்து சுழலும் பற்சக்கரங்கள்.

Gelatine .. ஒருவகை எலும்பு பசை, ஜிலேட்டின்.

Glass Cleaning .. கண்ணாடி சுத்தம் செய்தல்.

Glass Negative	..	கண்ணாடி எதிர்மறைத் தகடு.
Glass polishing	..	கண்ணாடியைக் கம்பளத் துண்டால் மெருகிடல்.
'G' Line	..	அளவைக் குறுக்குக்கோடு.
Glue Carpenters	..	ஒருவித எலும்புப் பசை.
Glue fish	..	மீன் பசை.
Government interested lands field measurement Book	..	அரசினருக்கு உரிமையுள்ள புல அளவைச் சுவடி.
Grade	..	தரம், நிலை.
Gradation	..	தரப்படுத்தல், தரவாரியாகப் பிரித் தல்.
Graduated	..	அளவுகள் குறிக்கப்பட்ட.
Graining	..	அச்சிடும் தகட்டைக் குழித்தல்.
Granite Stone	..	கருங்கல்.
Gravelled Road	..	சரள்சாலை, கப்பிச்சாலை.
Grease Cup	..	கொழுப்புப் பசைக் கிண்ணம்.
Grease Gun	..	கிரீஸ் செலுத்தும் கருவி.
Great Trigonometrical station	..	தேசீய முக்கோண அளவுக்குறி.
Grey print	..	சாம்பல்நிற அச்சுப்படம்.
Gripper bar	..	பிடிப்புத் தண்டு.
Ground glass	..	அரை குறையாக ஒளி ஊடுருவிச் செல்லும்படி தேய்த்த கண்ணாடி.
Ground Rent Survey	..	மனைவரி நில அளவை.
Guard	..	காப்புத் தகடு.
Guillotine	..	காகிதம் வெட்டும் யந்திரம்.
Gumming up	..	தகட்டுக்கு பிசின் பூசுதல்.
Gunter's Chain	..	கண்டர் சங்கிலி.
Half tone work	..	தேவையான நிழல் பேதம் உண்டாக் கத் திரை மூலம் நிழற்படம் பிடித் தல்.
Hammer jewellers	..	தட்டார் சுத்தியல்.
Hammer-ordinary	..	சாதாரண சம்மட்டி, சாதாரண சுத்தி யல்.
Hand press	..	கை அச்சு.
Hand pump	..	கை விசைக் குழாய்.
Hand wheel	..	கைச்சக்கரம்.
Handle	..	கைப்பிடி.
Hard brush	..	கடினதூரிகை, கெட்டித்தூரிகை.
Head Computor	..	தலைமைக் கணிகர்.
Head Compositor	..	தலைமை அச்சுக் கோப்பவர்.
Head Draughtsman	..	வரை படத் தலைமை வரைவாளர்.
Head Surveyor	..	தலைமை நில அளவையாளர்.
Headquarter-Office	..	தலைமை அலுவலகம்.

High tide line .. அலை ஏறும் வரம்பு.
Hired Labour .. அமர்த்தப் பட்ட கூலியாள்.
Holing .. துளையிடுதல்.
Holding .. கைப்பற்று நிலங்கள்.
Homogeneous .. ஒரேவிதமான, ஒருங்கமைந்த.
Horizon .. அடிவானம்.
Horizontal .. படுத்த கோடு.
Horizontal Reading .. கோண அளவு மானியின் சமதளத் தட்டு காட்டும் அளவு.
Horizontal levelling .. சமதள நிரவல்.
Hormonization .. இணக்கம் செய்தல்.
House tax Register .. வீட்டு வரிப்பதிவேடு
Hydrant .. நீர்க்குழாய்.
Hygroscopic .. காற்றின் ஈரத்தை உறிஞ்சும் தன்மையுள்ள.
Hypotenuse .. செம்பக்கம்.
Hypotenuse table .. செம்பக்கப் பட்டியல்.
Identical .. ஒரே மாதிரியான.
Identification .. அடையாளம் கண்டு பிடித்தல்.
Imprint .. அச்சுப் பிரதிகளின் கீழ், பதிப்பாளர் பெயர், பதிப்பித்தக் காலம் முதலியனக் குறித்தல்.
Impression pad .. தெளிவானப் பதிவுக்காக அச்சிடும் தாளின் கீழ் வைக்கும் தகடு.
Impression Cylinder .. அச்சுப் பதிவு உருளை
Impression Examination .. அச்சுப் பதிப்பு சோதனை.
Inaccessible .. அணுக முடியாத.
Inch .. அங்குலம்.
Inclined plane .. சாய்வுதளம்.
Indentor .. தேவை தெரிவிப்பவர்.
Index .. அட்டவணை.
Index map .. அட்டவணை வரை படம்
Indian ink .. வரைய உதவும் கரிய மை.
Indices (to Chain) .. குறி வில்லை.
Individual ledger of instrument கருவி வழங்கும் பேரேடு.
Initial Cadastral Survey .. நிலத்தீர்வை விதிப்புக்காகச் செய்த முதல் நில அளவை.
Initial Survey .. முதல் நில அளவை.
Ink reducer .. அச்சிடும் மையின் பிசுக்குத் தன்மையைக் குறைக்கும் பொருள்.
Ink-radiant .. ஒளி வீசும் மை.
Inking .. மையால் எழுதல்.
Inking Slab .. மையிடும் தகடு.

Inspector of Survey and Land Records ..	நில அளவைப் பதிவேடுகள் ஆய்வாளர்.
Inspection Report ..	ஆய்வு அறிக்கை.
Intersect ..	வெட்டு.
Introduction ..	முகவுரை.
Intensity of illumination ..	ஒளிச் செறிவு.
Intensification of Negative ..	எதிர் மறையில் அச்சிடப்படாத இடங்களில் ஒளியைத் தடுக்கும் தன்மையை அதிகரித்தல்.
Interpolated Stations ..	இடையே நடும் கற்கள்
Invoice ..	விலைப் பட்டியல்.
Iodising Solution ..	கொலோடின் திராவகத்தில் அயோடினை சேர்க்கும் கரைசல்.
Iron Clad Switch fuse ..	இரும்பால் மூடப்பட்ட உருகு கம்பி கொண்ட மின்சாரப் பித்தான்.
Joggers ..	அசைப்பான்கள்.
Key (to the map) ..	பட விளக்கக் குறிப்பு.
Khandam ..	கண்டம்.
Khandam Boundary ..	கண்டம் எல்லை.
Khandam Circuit ..	கண்டச் சுற்று.
Khandam Station ..	கண்டக்கல்.
Khasra Method ..	காஸ்ரா முறை.
Kiln ..	காளவாய்.
Ladder (relating to field sketch)	ஏணிக் குறிப்புக் கட்டம்.
Lamp Black ..	விளக்குக் கரி, சுடர் கரி.
Lamp post ..	விளக்குக் கம்பம்.
Land Complaint ..	நில வழக்கு.
Land Records Draughtsman ..	நிலப்பதிவேடு வரைபட வரைவாளர்.
Land Register ..	நில உரிமைப் பதிவேடு.
Latitude ..	அக்ஷரேகை, நேர்கோடு.
Level ..	மட்டம்.
Limit ..	எல்லை, வரம்பு, வரையறு.
Line Clearance ..	அளவைத் தடைகளை விலக்கல்.
Linear measurement ..	நீட்டல் அளவு.
Line of collimation ..	குறுக்குக் கம்பிகளின் சந்திப்பையும் பொருள் லென்ஸின் ஒளி மையத்தையும் சேர்க்கும் கற்பனை நேர்கோடு, காலிமேஷன் கோடு.
Link ..	சங்கிலிக் கணு
Lithography ..	லித்தோ கிராபி (ஒரு வித அச்சு முறை)..
Litho ink ..	கல்லச்சு மை.
Location ..	இருக்குமிடம், இடம் குறிப்பிடல்.

Location sketch ..	இடம் காட்டும் வரைபடம்.
Locality ..	இடம், சுற்றுவட்டாரம்.
Lockout ..	தொழிற்சாலை அடைப்பு.
Longitude ..	தீர்க்க ரேகை, நிறைகோடு.
Low tide Line ..	அலை இறங்கும் வரம்பு.
Machine direction ..	நீரில் போட்ட தாள் சுருளும் திசைக்குச் செங்குத்தான திசை.
Machine ..	யந்திரம்.
Machine Maintenance ..	யந்திரப் பராமரிப்பு.
Madras Survey and Land Records Department.	தமிழ்நாடு நில அளவைப் பதிவேடுகள் துறை.
Magnetic Bearing ..	காந்த துருவ கோணம்.
Magnetic Campass ..	காந்த திசைமானி.
Magnetic pole ..	காந்தத் துருவம்.
Magnitude ..	பரிமாணம்.
Magnetic needle ..	காந்த ஊசி.
Mahazar ..	கூட்டு மனு, மகஜர்.
Main Switch ..	மின்சார முக்கிய பித்தான்.
Maintenance ..	பராமரிப்பு, பேணுதல்.
Main Circuit ..	பெரும்பகுதிச் சுற்று.
Make ready ..	தயார் செய்.
Mallet (wooden) ..	மரக் கொட்டாப்புளி.
Manuscript Block Maps ..	கைவரைப் பகுதிப் படம்.
Maps ..	தேசப் படங்கள்.
Mapping pen ..	நிலப்படம் வரையும் பேனா.
Margins ..	ஓரங்கள்.
Maritime ..	கடல் சார்ந்த.
Maritime village ..	கடலோரக் கிராமம்.
Meantime ..	பொதுக் கால அளவு, சராசரி நேரம், இடைக்காலம்.
Measurement error ..	அளவுப் பிழை.
Measured in field and records received in office.	புலத்தில் அளக்கப்பெற்று, அலுவலகத்திற்கு வந்து சேர்ந்த, பதிவுக் கட்டுகள்.
Measuremente-Allowance ..	அளவுப்படி.
Metallic Tape ..	அளவு துணி நாடா.
Meridian ..	தீர்க்க ரேகை.
Meridian distance ..	கிரீன்விச் தீர்க்க ரேகையிலிருந்து. குறிப்பிட்ட இடத்திற்குள்ள தூரம்.
Meridian passage ..	வான் உச்ச வழி.
Meridian plane of a specified place.	இரு துருவங்களையும், ஒரு குறிப்பிட்ட இடத்தையும் இணைக்கும் சமதளம்.
Micrometer ..	நுண் மானி.

Minimum graduation ..	மிகக் குறைந்த அளவுக் குறியிடல்.
Minor Circuit ..	சிறு பகுதிச் சுற்று.
Minor inam Land ..	சிறு இனாம் நிலம்.
Minor Circuit field ..	கோணமானியால் அளக்கப்படும் சிறு பகுதி.
Missing ..	தவறிப்போதல்.
Missing stone ..	காணாத கல்.
Misregistered ..	தவறாகப் பதிவு செய்தது.
Mitta ..	மிட்டா.
Monthly abstract statement of out-turn of Computor draughtsman.	கணிக வரைபட வரைவாளரின் மாதாந்திர வேலைச் சுருக்கம்.
Mobile staff ..	சிலவகை நில அளவை வேலைகளுக்காக நியமிக்கப்பட்ட தனிச் சிப்பந்தி.
Mound ..	மண்மேடு.
Mounting flat on cloth ..	துணிமீது ஒட்டுதல்.
Mounting flat and supplying in roll up form.	படங்களைத் துண்டிக்காமல், துணிமீது ஒட்டிச் சுருளாக்கி வழங்குதல்; துணியில் ஒட்டிச் சுருளாக்கி வழங்குதல்.
Mounting on Zinc ..	துத்தநாகத் தகட்டின்மீது ஒட்டுதல்.
Nature ..	இயற்கை, தன்மை.
Nautical Almanac ..	கப்பலோட்டிகளுக்குப் பயன்படும் வான சாஸ்திரக் கடல் நிலைப் பஞ்சாங்கம்.
Negative, dense ..	அச்சிடக்கூடாத இடங்களில் ஒளியைத் தடுக்கும் தன்மை அதிகமுள்ள எதிர் மறை.
Negative over exposed ..	மிகையாக ஒளி படிந்த எதிர்மறை.
Negative under exposed ..	போதுமான அளவு ஒளிபடியாத எதிர் மறை.
Negative reversed ..	பக்கம் மாறிய நிழற்பட எதிர்மறை.
Negative, dust on ..	சுடர்கரியை உபயோகித்துத் தயாரித்த எதிர்மறை.
Negative, Wet plate ..	ஈரமான நிழற்பட எதிர்மறைத் தகடு.
Negative Correction ..	நிழற்பட எதிர்மறைத் திருத்தம்.
Negative development ..	நிழற்பட எதிர்மறை உரு விளக்கல்.
Negative duplication ..	நிழற்பட எதிர்மறை இரட்டிப்பு.
Negative storage ..	நிழற்பட எதிர்மறை சேமிப்பு.
Negative varnishing ..	நிழற்பட எதிர்மறை மேற்பூச்சு.
Negative print ..	எதிர்ப் பிரதி.
Negative ..	நிழற்பட எதிர்மறை.
Neighbouring ..	அருகேயுள்ள, அருகிலுள்ள, அடுத்துள்ள, பக்கத்திலுள்ள.
North Polar distance ..	வடதுருவத் தூரம்.

Nominal Roll	..	பெயர்க் குறிப்பேடு.
Northings	..	வட திசை.
Numbering	..	எண் இடுதல்.
Nut	..	திருகு, சுரை.
Object glass	..	பொருள் லென்ஸ்.
Obliteration	..	அழித்தல்.
Offset distance	..	செங்குத்து அளவு.
Offset	..	செங்குத்தளவு.
Officer-in-charge	..	நிர்வாகப் பொறுப்பதிகாரி.
Offset Machine rotary	..	சுழலும் உருளைகளுடன் ரப்பர் கம்பளத்தால் அச்சிடும் யந்திரம்.
Offset pole	..	செங்குத்தளவு கோல்.
Oil hole	..	எண்ணெய்வழி, எண்ணெய்த்துளை.
Oil can	..	எண்ணெய்க் குவளை.
Olive oil	..	ஆலிவ் எண்ணெய்.
On India Government Service	..	இந்திய அரசினர் அஞ்சல்.
Optic Centre	..	ஒளி மையம்.
Original Compilation	..	முதல் தொகுப்பு.
Original field measurement book.		மூல நில அளவைச் சுவடி.
Original	..	அசல், மூலம்.
Outline sheet	..	சாதாரணமாக கருப்பு மையில் அச்சிடப்படும் குறிகள் கொண்ட அச்சுப் பிரதி அல்லது மூலப் பிரதி.
Outturn	..	வேலை அளவு.
Outturn statement	..	செய்த வேலை அளவின் பட்டியல்.
Over printing, colours	..	குறிகளை உரிய நிறத்தில் மட்டும் அல்லாமல் வேறு நிறங்களிலும் தவறாக அச்சிடுதல்.
Oxidation	..	பிராண வாயுவால் துருவாகுதல்.
Pagoda	..	கோவில்.
Palm oil	..	பனைவகை எண்ணெய்.
Paper having dimensional stability.		சீதோஷ்ணத்தால் அளவு மாறாத தாள்.
Paper bed	..	தாள் அடுக்கு.
Paper clamp	..	தாள் பற்றிறுக்கி, காகித கவ்வி.
Paper contraction	..	தாள் சுருங்குதல்.
Paper expansion	..	தாள் விரிவடைதல்.
Paper conditioning	..	தாள் பக்குவப் படுத்தல்.
Paper spoilage allowance	..	தாள் சேதாரத் தள்ளுபடி.
Paper storage	..	தாள் கிடங்கு.
Paper coated	..	பூசியத் தாள்.
Paper litho	.. ..	லிதோ அச்சுத்தாள்.

Paper Calendei	அச்சு யந்திர அறைக்காற்றின் ஈரப்ப தனை அச்சிடும் தாள்கள் அடைய உபயோகிக்கும் சட்டம்.
Paper fibres	தாளிலுள்ள செல்லுலோஸ் நூலிழை கள்.
Parallel lines	சம தூரக் கோடுகள்.
Parallel ruler	இணை கோடுகள், வரைகோல்.
Passed stones	தேர்ந்தெடுத்த கற்கள்.
Pass list	தேர்வுச் சீட்டு.
Peg	முளை.
Pen holder	பேனுக்கட்டை.
Pentagraph	விகிதப்படி வரை படத்தைப் பெருக் கும் சுருக்கும் கருவி.
Perpendicular	செங்குத்தான.
Perimeter	சுற்றளவு.
Percentage	சதவீதம்.
Persons responsible register	பொறுப்பாளிகளை குறிக்கும் பதிவேடு.
Perambulation	சுற்றிப்பார்த்தல்.
Petty plants	குறைந்த விலையுள்ள கருவிகள்.
Photo Zincography	போட்டோ ஜிங்கோ கிராபி (ஒருவித அச்சு முறை).
Photography-Wet plate	ஈரப் பூச்சுள்ள கண்ணாடித் தகட்டி னால் நிழற்படம் பிடித்தல்.
Physical unfitness	உடல் நலக் குறைவால் வேலைக்கு தகுதியின்மை.
Pins, cotter	காட்டர்பின் (ஒருவகைப் பிணைக்கும் ஆணி).
Pins split	பிளவுள்ள பிணைக்கும் ஆணி.
Plate making	எதிர்மறை அல்லது மூலத்திலிருந்து உருவத்தை அச்சிடும் தகட்டிற்கு மாற்றுதல்.
Plate reversed	திருப்பப்பட்ட உருவமுள்ள அச்சிடும் தகடு.
Plate gumming up	அச்சிடும் தகட்டில் பிசின்பூசுதல்.
Plate storage	தகடுகளை வைத்து வைக்கும் முறை.
Plate Cylinder	அச்சுத் தகட்டை ஏற்கும் உருளை.
Plate gripper	தகடு பிடிப்பான்.
Plate inking rollers	தகட்டின் மீது செல்லும் மையிடும் உருளைகள்.
Plant and Machinery	தளவாடமும் யந்திரமும்.
Plane Table	தரைப்பட அளவைக் கருவி, மேஜை அளவுக்கருவி.
Plotting filed	புல அளவுப்படி வரைதல்.
Plotting points	அளவுப்படி புள்ளிகளைக் குறித்தல்.

Plottable data	..	வரைவதற்குத்தேவையான விவரங்கள்.
Plotting	..	அளவுப்படி வரைதல்.
Plummet hole	..	தலைத்துளை.
Plumb Bob	..	தூக்குக் குண்டு.
Plumb Line	..	குண்டு நூல்.
Pointer	..	குறிப்பான்.
Pole Star	..	துருவ நக்ஷத்திரம்.
Polished plate	..	மெருகிட்டத் தகடு.
Polygon	..	பல கோண உருவம்.
Powder process	..	சுடர்கரியால் எதிர்மறையின் பிரதி தயாரித்தல்.
Poster	..	சுவரொட்டி.
Positive print	..	நேர்பிரதி.
Potential difference	..	இயல்பாயுள்ள வேறுபாடு.
Press order proof	..	அச்சிட உத்தரவுள்ள இறுதிப் பார்வைப் பிரதி.
Precision	..	துல்லியம், சரிநுட்பம்.
Press man	..	அச்சகவேலையாள்.
Prints	..	அச்சுப்பிரதிகள்.
Printing down arc lamp	..	எதிர்மறை உருவத்தை தகட்டிற்கு மாற்ற உதவும் பிறை விளக்கு.
Print original	..	மூல அச்சுப்பிரதி.
Printing direct	..	தகட்டிலிருந்து நேரே தாளில் அச்சிடுதல்.
Prismatic Compass	..	கோணங்கள் அளக்கும் பட்டைக் கண்ணாடிக் கருவி.
Progress statement	..	வேலை நிலைமை அறிக்கை.
Projecting bends	..	நீட்டிக்கொண்டுள்ள வளைவுகள்.
Proprietary estates	..	ஜமீன்கள், இனும்கள்.
Progress Register by process	..	செய்முறையின்படி வேலை முன்னேற்றப் பதிவேடு.
Proportion	..	வீதம்.
Progress Register	..	செய்த வேலைப் பதிவேடு.
Protractor	..	கோணமானி.
Proportional Compass	..	விகிதக் கவராயம்.
Pulley loose	..	தளர்ந்த, கப்பிதளர்ச்சி.
Pulley tight	..	இறுகிய கப்பி.
Purtalling	..	நில அளவை மேற்பார்வையில் குறுக்கே அளந்து சரிபார்க்கும் முறை.
Purtal lines	..	ஷை முறையில் அளக்கப்படும் குறுக்குக் கோடுகள்.
Quadrant	..	கால் வட்டம்.

Quadrilateral ..	நாற்கரம்.
Quarter junction ..	நாலு மூலை சந்திப்பு.
Quarterly return of inspection of field work	அளவைவேலை ஆய்வின் காலாண்டு அறிக்கை.
Radius ..	ஆரம்.
Range Deputy Surveyor ..	சரக நில அளவைத்துணை அலுவலர்.
Range charge ..	சரக பொறுப்பு.
Range office ..	சரக அலுவலகம்.
Ranges ..	சரகங்கள்.
Ratio ..	விகிதம்.
Rate of speed ..	வேக வீதம்.
Record of measurement ..	அளவுப்பதிவேடு.
Record of rights operation ..	நில உரிமைப் பதிவு நடவடிக்கை.
Rectangular ..	நீண்ட சதுரமான.
Rectangular Coordinates ..	நீண்ட சதுர அச்சுத்தூரங்கள்.
Redevelopment ..	மீண்டும் உருவிளக்கம் செய்தல்.
Red cross ..	செஞ்சிலுவை.
Reduced ..	குறைக்கப்பட்ட.
Refixing sketch ..	கற்களைப் புதுப்பிக்கும் போது தயார் செய்த வரைபடம்.
Register slip ..	அச்சிடுவதற்கான குறிப்புகளைக் கொண்ட தாள்.
Register of Records received and returned.	பெற்ற, அனுப்பிய பதிவுக்கட்டுகள் பதிவேடு.
Register of Village boundry dispute.	கிராம எல்லைத் தகராறுப் பதிவேடு.
Register of appeals on field boundary disputes.	நில எல்லைத் தகராறு முறையீட்டுப் பதிவேடு.
Register of Appeals on village boundary disputes.	கிராம எல்லைத் தகராறு முறையீட்டுப் பதிவேடு.
Register of daily abstract of progress of sub-process.	செய்முறை உட்பிரிவு வேலைநிலை அன்றாட சுருக்க அறிக்கைப் பதிவேடு.
Register of field boundary disputes.	நில எல்லைத் தகராறுப் பதிவேடு.
Register of Inspection of field work.	நில அளவு மேற்பார்வை பதிவேடு.
Register of letters received and sent.	பெற்ற, அனுப்பிய கடிதங்கள் பதிவேடு.
Register of Process G & H ..	ஜி & எச் செய்முறை வேலைப் பதிவேடு.
Registry ..	பதிவு.
Registration of colours ..	நிறங்களைப் பதிவு செய்தல்.
Registered Holder ..	பதிவு பெற்ற உடைமையாளர்.
Regulation of work ..	வேலை ஒழுங்கமைப்பு.

Relative positions ..	தராதர இடங்கள்.
Remarks column ..	குறிப்புக் கட்டம்.
Removing the plate ..	தகடு நீக்கல்.
Renewal ..	புதுப்பித்தல்.
Renumbering ..	திரும்ப எண் இடுதல்.
Repair stones ..	கற்கள் சீர்ப்படுத்தல்.
Representative fraction ..	அளவு விகிதப் பின்னம்.
Reputed owner ..	சொத்துக்கு உடையவர் என்று சொல்லப்படுபவர்.
Resurvey ..	மறு நில அளவை.
Revenue records and registration.	நிலவருவாய் சம்பந்தமான பதிவேடுகளும் பதிவு செய்தலும்.
Revenue Unit ..	நில வருவாய்த்துறை நிர்வாகப்பகுதி.
Revision survey ..	திருத்தல் நில அளவை.
Revised proof ..	திருத்திய பார்வைப்படி புதுப்பிக்கப் பட்ட பார்வைப்பட்டி.
Ridge ..	வரம்பு.
Right angle ..	செங்கோணம்.
Right of way ..	வழி உரிமை.
River half ..	ஆற்றின் பாதி.
Road Drawing Pen ..	இருவரி வரைகோல்.
Road Survey ..	சாலை அளவை.
Rock mark ..	பாறைக் குறி.
Rods carbon ..	கரித் தண்டுகள்.
Root ..	மூலம்.
Rollers, Machine ..	யந்திர உருளைகள்.
Roll up ..	சுற்றிவை, மேலே சுருட்டு.
Rotate ..	சுற்று.
Rough area list ..	தோராய விஸ்தீரணப் பட்டியல்.
Rough Block Map ..	தோராய பெரும்பகுதிப் படம்.
Runner ..	அச்சிடும் யந்திரத்தில் தேவையான இடங்களில் வேண்டிய சலனம் ஏற்படுத்தும் கருவி.
Run through ..	இறுதியாக அச்சிட ஆணை.
Saint George Cross ..	சிலுவைக் குறி.
Salters spring balance ..	ஸால்டரின் வில் தராசு.
Salt pan ..	உப்புப் பாத்தி.
Scale ..	அளவுகோல்.
Scrapper Box ..	சீவுளி.
Scrapper Box ..	பார்வைப் பிரதி எடுக்கும் ஒருவித அச்சு யந்திரத்தில் மர அல்லது இரும்பு சட்டத்தைக் கொண்ட பெட்டி.

Scrapper press proving	..	பார்வைப் பிரதி எடுக்கும் ஒருவித அச்சு யந்திரம்.
Scrapper-Negative	..	எதிர்மறையில் வரைய உதவும் ஒரு வித ஊசி.
Scrapper leather Bit	..	துண்டுத்தோல் சீவுளி.
Screw	..	திருகாணி.
Screw thread	..	திருகாணியின் இழை.
Scum	..	துத்தநாகத் தகட்டில் தோன்றும் அச்சாகும் சிறு புள்ளிகள்.
Section Mounting	..	படங்களைத் துண்டித்து துணியில் ஒட்டுதல்.
Segment	..	வட்டப்பகுதி.
Sensitive	..	உணர்வுள்ள.
Series	..	வரிசை.
Service unpaid	..	வில்லை ஒட்டாத அரசினர் அஞ்சல்.
Sett Off Indelible	..	எளிதில் அழிக்கமுடியாத செட்ஆப் (அச்சிடும் தகட்டிலிருந்து மற்றொரு தகட்டிற்கு மாற்றியதும் எளிதில் அழிக்க முடியாததும் அச்சிடத் தேவையில்லாததுமான உருவம்).
Setting	..	அமைத்தல், பொருத்துதல்.
Shape	..	உருவம்.
Shaft overhead	..	அச்சு யந்திரங்களை இயக்கப் பயன்படும் மேலேயுள்ள நீண்ட கோல்.
Sheet joining	..	படங்களின் பாகங்களை ஒட்டி இணைத்தல்.
Shift work	..	முறைநேர வேலை.
Siderial time	..	விண்மீன் வழிக்காலம்.
Simple scale	..	சாதாரண அளவுக்கோல்.
Siderial year	..	பூமி ஒருமுறை சூரியனைச் சுற்றுவதற்கான காலம்.
Simple triangle	..	சாதாரண முக்கோணம்.
Simple Trianglation system	..	எளிய முக்கோண நில அளவை முறை.
Sivayijama	..	சிவாயிஜமா.
Size of work	..	வேலை அளவு.
Sizing	..	படத்தை வார்னிஷ் செய்வதற்கு முன் ஜிலேட்டின் கரைசலால் பூசுதல்.
Skeleton Land Register	..	நில விவரத் தோராயக் குறிப்பேடு.
Slide (slide for Photography)	..	நிழற்படச்சில்.
Slope	..	சரிவு.
Soil	..	மண்.
Soil Block Survey	..	மண்வளப் பெரும் பகுதி நில அளவை.
Solution	..	கரைசல்.
Southings	..	தென்திசை அளவுகள்.

Sparking	..	தீப்பொறி வீசுதல்.
Special Deputy Surveyor	..	நில அளவைத் தனி துணை அலுவலர்.
Special Head Surveyor	..	நில அளவைத் தனித் தலைமை பணியாளர்.
Spherical Co-ordinates	..	கோள அச்சுத் தூரங்கள்.
Splitting	..	பிரித்தல், உடைத்தல், துண்டாக்குதல்.
Spirit level	..	ரசமட்டம்.
Spring balance	..	வில் தராசு.
Spring	..	ஊற்று.
Square root	..	வர்க்கமூலம்.
Standard form	..	தரப்படுத்திய படிவம்.
Standard pole	..	தரக்கோல்.
Steady	..	உறுதியான.
Steel tape	..	அளவு எஃகு நாடா.
Stitching	..	தையல் போடுதல்.
Stock Book of Stones	..	கல் இருப்புக் கணக்கு.
Stone Accountant	..	கல் கணக்காளர்.
Stone Depot	..	கல் கிடங்கு.
Stone pass list	..	அங்கீகாரம் பெற்ற கற்கள் பட்டியல்.
Store Account	..	கிடங்குக் கணக்கு.
Store Keeper	..	பண்டகக் காப்பாளர்.
Straight edge	..	நேர் கோடு வரை கருவி.
Stream	..	ஓடை.
Street Survey	..	வீதி அளவை.
Strike Order	..	அடிப்பதற்கான ஆணை.
Sub-Assistant Director of Survey.		நில அளவைத் துணை உதவி நெறியாளர்.
Sub Circuit	..	கோண அளவு மானியால் அளக்கப்படும் பகுதியின் உட்பிரிவு.
Subdivision	..	உட்பிரிவு.
Subdivision boundary	..	உட்பிரிவு வரம்பு.
Subdivision stone	..	உட்பிரிவுக் கல்.
Sub-Section	..	உட்பிரிவு.
Sub-Section Progress	..	உட்பிரிவின் வேலை நிலை.
Substratum	..	கீழ்த்தளம்.
Sub-soil	..	அடி மண்.
Supplemental Survey	..	துணை அளவை (நிறைவாக்கும் நில அளவை).
Survey advance	..	நில அளவை முன் பணம்.
Survey and Land Records Department.		நில அளவை பத்திரங்கள் துறை.
Survey charges	..	நில அளவைச் செலவுகள்.
Survey Demarcation Stone	..	நில அளவை எல்லை குறிக்கும் அளவைக் கல்.

Survey Error .. நில அளவைப் பிழை.
Survey field .. அளந்த புலம்.
Survey forms .. நில அளவை படிவங்கள்.
Survey Officers .. நில அளவை அலுவலர்கள்.
Survey Party .. நில அளவைக் குழு.
Survey Party Office .. நில அளவைக் குழு அலுவலகம்.
Survey stone .. அளவைக் கல்.
Survey stones ... அளவைக் கற்கள்.
Swamp .. சதுப்பு நிலம்.
Switch on (light) .. மின் விளக்கைப் போடு.
Switch on (fan) .. மின் விசிறியைப் போடு.
Switch off (light) .. மின் விளக்கை அணை.
Switch off (fan) .. மின் விசிறியை நிறுத்து.
Symmetrically .. செவ்வொழுங்காக.
Synoptical volume ... சில்வகை அளவை குறிகளின் சுருக்கங்கள் அடங்கிய புத்தகம்.
Tack (nails) .. தட்டைத் தலையுள்ள கூர்மையான சிறு ஆணி.
Tallow .. மாட்டுக் கொழுப்பு.
Taluk map .. தாலுக்கா வரை படம்.
Taluk Surveyor .. தாலுக்கா நில அளவைப் பணியாளர்.
Tangent .. வட்டத்தின் தொடு கோடு.
Tangent clamp .. டான்ஜெண்ட் இறுக்கி.
Tangent screw .. டான்ஜெண்ட் திருகாணி.
Tape .. அளவு நாடா.
Target .. இலக்கு.
Technical Supervision .. தொழில் நுட்ப மேற்பார்வை.
Temper .. எஃகின் ஒருவித தன்மை.
Tentative Area list .. தற்காலிக விஸ்தீரணப் பட்டியல்.
Tentative Sanction .. தற்காலிக ஒப்புதல்.
Tenure .. உரிமை முறை நீடிப்புக் காலம்.
Terrestial Equator .. பூமத்திய ரேகை.
Test correction sketch .. சோதனைத் திருத்த வரை படம்.
Theodolite .. கோண அளவு மானி.
The Polar Distance .. துருவதூரம்.
Theodolite Station .. கோண அளவைக் குறி.
Theodolite Missing stone .. காணாத தியோடலைட் கற்கள்.
Theodolite Survey .. கோண அளவை.
Thick lines .. தடித்த கோடுகள்.
Thressing floor .. களம்.

Tie lines	..	பூமிக்குள் நடும் அளவைக் கற்களைக் குறிப்பிடுவதற்கான அளவு கோடுகள்.
Tightening bar	..	இறுக்கும் தண்டு.
Tilting	..	ஒருபுறமாகச் சாய்த்தல்.
Time of Development	..	உரு விளங்கும் நேரம்.
Tint lines	..	இள நிறக் கோடுகள்.
Tinted impression	..	அச்சிடக் கூடாத இடங்களில் இள நிற புள்ளிகள் கொண்ட அச்சுப்பிரதி.
Tinting medium	..	அச்சிடும் மையின் வண்ணத் திறனை குறைப்பதற்காகச் சேர்க்கும் பொருள்.
Tom Tom	..	தண்டோரா போடுதல், பறையறைதல்.
Topographical	..	ஸ்தல அமைப்பு கொண்ட.
Topographical details	..	ஸ்தல அமைப்பு விவரங்கள்.
Town Survey	..	நகர நில அளவை.
Town Surveyor	..	நகர நில அளவைப் பணியாளர்.
Town Survey block map	..	நகரத்தின் பகுதி நில அளவைப் படம்.
Tracing glass	..	நகல் வரை கண்ணாடி.
Tracing paper	..	வரை பட நகல் தாள்.
Tract	..	நிலப் பரப்பு.
Track	..	வழி, பாதை.
Transfer paper	..	உருவத்தை அச்சிடும் தகட்டிற்கு மாற்ற உதவும் பூச்சுத் தாள்.
Transit Theodolite	..	செங்குத்து பட்டத்தில் முழுதும் சுழலும் தூரதரிசினியுள்ள தியோடலைட்.
Traverse	..	ட்ராவர்ஸ் (பூமியின் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இடையே உள்ள கோணங்களும் தூரங்களும்).
Traverse basis	..	ட்ராவர்ஸ் அடிப்படை.
Traverse Computation	..	ட்ராவர்ஸ் கணித்தல்.
Traverse plotting	..	ட்ராவர்ஸ் வரைதல்.
Traverse sheet	..	ட்ராவர்ஸ் தாள்.
Traverse Skeleton plots	..	ட்ராவர்ஸ் தோற்றப்படம்.
Tree like growth	..	மரம் போன்ற வளர்ச்சி.
Triangulation	..	முக்கோணப்படுத்தல், முக்கோண முறை அளவை.
Triangulation sketch	..	முக்கோண அமைப்பு வரைபடம்.
Trignometry	..	திரிகோண சாஸ்திரம்.
Trignometrical point	..	அகில இந்திய கோண அளவைக் குறி.
Trignometrical Station	..	முக்கோண அளவைக் கல்.

Trijunction ..	முச்சந்தி.
Triplicate copy ..	மூன்றாம் பிரதி.
Triplicate field measurement book.	நிலை அளவை முப்பிரதிச் சுவடி.
Under-sized stones ..	விகிதத்திற்கு குறைந்த அளவுள்ள கற்கள்.
Un-enfranchised Inam ..	முழு உரிமை அளிக்கப் பெறாத இனாம்.
Uniform Illumination .	ஒரு படித்தான பிரகாசிப்பு.
Varnish, Varnishing ..	மெருகு எண்ணெய், மெருகெண்ணெய் பூசுதல்.
Vernier ..	நுண் அளவுக் கருவி.
Verticle angle ..	செங்குத்துக் கோணம்.
Verticle axis ..	செங்குத்து அச்சு.
Vertical levelling ..	நேர்குத்து மட்டப்படுத்தல்.
Vibrating roller ..	ஊசலாடிச் சுழலும் உருளை.
Village Boundary Station ..	கிராம எல்லைக் கல்.
Village Bijunction stone ..	இரு கிராம சந்திப்புக் கல்.
Village Boundary ..	கிராம எல்லை.
Village depot ..	கிராம கிடங்கு.
Village map ..	கிராம படம்.
Village Trijunction ..	கிராம முச்சந்தி, கிராம முக்கூட்டு.
Village Stone account register	கிராமக்கல் கணக்குப் பதிவேடு.
Villagewar register of progress of work.	கிராம வாரியான வேலை நிலைப்பதிவேடு.
Villagewar register of outturn of Computor Draftsman.	கணித வரைபட வரைவாளர் செய்த வேலையின் கிராமவாரிப் பதிவேடு.
Virgin metal surface	தூய்மையான உலோக மேற்பரப்பு.
Virgin Wax ..	கலப்பில்லாத மெழுகு.
Waste Block ..	தரிசு நிலப் பெரும்பகுதி.
Washingout solution ..	அச்சுத் தகட்டிலிருந்து உருவ மையை நீக்கும் கரைசல்.
Watery ..	நீர் போன்ற.
Water proof ink ..	நீரில் அழியாத மை.
Water level ..	நீர் மட்டம்.
Weld mesh ..	உருக்கு வலைக்கம்பி, பற்ற வைத்த கம்பி வலை.
Well shaped ..	நல்ல உரு அமைந்த.
Westings ..	மேல் திசை அளவுகள்.
Wheel parallel ..	இணை கோடு வரையும் இருசக்கர கருவி.
Whirler ..	சுழற்றி.
Wire mesh ..	அச்சுத் தகட்டில் நுட்ப உணர்வுக் கரைசலை பூசுவதற்கான கருவி.

Wire side of paper .. தாளின் வலைப்பக்கம் (தாள் தயாரிப்பு யந்திரத்தின் வலையைத் தொட்டுக் கொண்டிருந்த பக்கம்.

Wire brush .. கம்பித் தூரிகை.

Wood oil .. மர எண்ணெய்.

Wooley .. கம்பளி போன்ற.

Worm arrangement .. யந்திரத்தின் குறிப்பிட்ட பகுதியைத் தேவையானபடி இயக்கும் ஒருவித கருவி.

Workshop flex .. தொழிற்சாலையில் யந்திரங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் தனி வகைக் கம்பி.

Yard .. கெஜம்.

Zenith .. உச்சம்.

Zincography .. துத்தநாக அச்சுக் கலை.

Zinco plate .. துத்தநாகத் தகடு.

Zinco drawing .. துத்தநாகத் தகட்டில் வரைதல்.